## செப்டம்பர் - 17- பொதுக்கால 24ம் ஞாயிறு

**முதல் வாசகம் : சீராக்27 : 30---- 28 : 7**

வெகுளி, சினம் ஆகிய இரண்டும் வெறுப்புக்குரியவை பாவிகள் இவற்றைப் பற்றிக் கொள்கின்றார்கள்.பழிவாங்குவோர் ஆண்டவரிடமிருந்து பழிக்குப்பழியே பெறுவர். ஆண்டவர் அவர்களுடைய பாவங்களைத் திண்ணமாய் நினைவில் வைத்திருப்பார்.உனக்கு அடுத்திருப்பவர் செய்த அநீதியை மன்னித்துவிடு அவ்வாறெனில் நீ மன்றாடும்போது உன் பாவங்கள் மன்னிக்கப்படும். மனிதர் மனிதர்மீது சினங்கொள்கின்றனர் அவ்வாறிருக்க, ஆண்டவர் தங்களுக்கு நலம் அளிப்பார் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?மனிதர் தம்போன்ற மனிதருக்கு இரக்கங்காட்டுவதில்லை அப்போது அவர்கள் தம் பாவமன்னிப்புக்காக எப்படி மன்றாடமுடியும்? அழியும் தன்மை கொண்ட மனிதர் வெகுளியை வளர்க்கின்றனர். அவ்வாறாயின், யார் அவர்களுடைய பாவங்களுக்குக் கழுவாய் தேட முடியும்?உன் முடிவை நினைத்துப்பார் பகைமையை அகற்று அழிவையும் சாவையையும் நினைத்துப்பார் கட்டளைகளில் நிலைத்திரு.கட்டளைகளை நினைவில் கொள் அடுத்தவர்மீது சினங்கொள்ளாதே உன்னத இறைவனின் உடன்படிக்கையைக் கருத்தில் வை குற்றங்களைப் பொருட்படுத்தாதே.

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்.
பொறுறுமையும் பேரன்பும் உள்ளவர்.

**இரண்டாம் வாசகம்: உரோமையர் 14: 7 – 9**

சகோதர சகோதரிகளே! நம்மிடையே எவரும் தமக்கென்று வாழ்வதில்லை. தமக்கென்று இறப்பதுமில்லை.வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம் இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கிறோம். ஆகவே, வாழ்ந்தாலும், இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம். ஏனெனில், இறந்தோர்மீதும் வாழ்வோர்மீதும் ஆட்சிசெலுத்தவே கிறிஸ்து இறந்தும் வாழ்கிறார்.

**நற்செய்தி : மத்தேயு18 : 21 – 35**

அக்காலத்தில் பேதுரு இயேசுவை அணுகி, ”ஆண்டவரே, என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்துவந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழு முறை மட்டுமா? எனக் கேட்டார்.அதற்கு இயேசு அவரிடம் கூறியது ”ஏழுமுறை மட்டுமல்ல் எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன்.விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம் ஓர் அரசர் தம் பணியாளர்களிடம் கணக்குக் கேட்க விரும்பினார்.அவர் கணக்குப் பார்க்கத் தொடங்கியபொழுது, அவரிடம் பத்தாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவனைக் கொண்டு வந்தனர்.அவன் பணத்தைத் திருப்பிக் கொடுக்க இயலாத நிலையில் இருந்தான். தலைவரோ, அவனையும் அவன் மனைவி மக்களோடு அவனுக்குரிய உடைமைகள் யாவற்றையும் விற்றுப் பணத்தைத் திருப்பி அடைக்க ஆணையிட்டார்.உடனே அப்பணியாள் அவர் காலில் விழுந்து பணிந்து, ”என்னைப் பொறுத்தருள்க் எல்லாவற்றையும் உமக்குத் திருப்பித் தந்து விடுகிறேன்” என்றான்.அப்பணியாளின் தலைவர் பரிவு கொண்டு அவனை விடுவித்து அவனது கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தார். ஆனால் அப்பணியாள் வெளியே சென்றதும், தன்னிடம் நூறு தெனாரியம் கடன்பட்டிருந்த உடன் பணியாளர் ஒருவரைக் கண்டு, ”நீ பட்ட கடனைத் திருப்பித்தா” எனக்கூறி அவரைப் பிடித்துக் கழுத்தை நெரித்தான்.உடனே அவனுடைய உடன் பணியாளர் காலில் விழுந்து, என்னைப் பொறுத்தருள்க் நான் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்” என்று அவனைக் கெஞ்சிக் கேட்டார்.ஆனால் அவன் அதற்கு இசையாது, கடனைத் திருப்பி அடைக்கும்வரை அவரைச் சிறையிலடைத்தான்.அவருடைய உடன் பணியாளர்கள் நடந்ததைக் கண்டபோது மிகவும் வருந்தித் தலைவரிடம் போய் நடந்தவற்றையெல்லாம் விளக்கிக் கூறினார்கள்.அப்போது தலைவர் அவனை வரவழைத்து, ”பொல்லாதவனே, நீ என்னை வேண்டிக் கொண்டதால் அந்தக் கடன் முழுவதையும் உனக்குத் தள்ளுபடி செய்தேன்.நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல நீயும் உன் உடன்பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் அல்லவா? என்று கேட்டார்.அத்தலைவர் சினங் கொண்டவராய், அனைத்துக் கடனையும் அவன் அடைக்கும்வரை அவனை வதைப்போரிடம் ஒப்படைத்தார்.உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதரர் சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார்“ என்றார்.

**தியானம்:** நம் இயேசுக்கிறிஸ்து உலகிற்குக் கொடுத்த மிக முக்கியமானது ”மன்னிப்புப் ” என்ற படிப்பினையாகும். நற்செய்தியில் இடம்பெறும் ஒரு தெனாரியம் ஒருநாள் கூலியாகும். கடவுள் நம் அளவற்ற பாவங்களை மன்னிப்பது போல, நாமும் பிறரின் பாவங்களை மன்னிப்பதன் வழியாக ஒப்புரவை ஏற்படுத்தும் ஓர் இறை சமுதாயமாக வாழ அழைக்கப்படுகின்றோம். ஒவ்வொரு முறையும் இயேசு கற்பித்த செபத்தை சொல்லும் போது ”எங்களுக்கு தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பது போல எங்கள். பாவங்களைப் பொறுத்தருளும்.”என்று சொல்லுவதை நாம் சுய ஆய்வு செய்ய வேண்டிய தருணம் இது. மன்னிக்க மறுக்கும் பொழுது சுவர்களைக் கட்டி உறவுகளைப் பிரிக்கின்றோம். ஆனால் மன்னிக்கும் பொழுது உறவுகளை கட்டி புதியதோர் உலகம் படைக்கின்றோம். குடும்பங்களிலும் சமூக வாழ்விலும் மன்னிப்புப் பண்பாட்டை தழைக்கச்செய்வோம். மன்னித்து இறையருள் நிறைவாகப் பெற்று வாழ்வோம்